©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 4.00 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 11] CHENNAI, WEDNESDAY, MARCH 23, 2011
Panguni 9, Thiruvalluvar Aandu–2042

# Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**CONTENTS**

*Pages.*

COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்**

ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் மறைமுகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பற்றிய அறிவிக்கை .. .. .. .. .. .. .. 210

**மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்—தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின்கீழ் நிலங்களை ஊராட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கான அறிவிக்கை .. .. .. .. .. 210

TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI

Terms and Conditions for Determination of Tariff for Intra State Transmission Distribution of Electricity under MYT Framework (Amendment) Regulations, 2011. .. 211-213

Tamil Nadu Electricity Supply (Amendment) Code, 2011 .. .. .. .. 214-217

GOVERNMENT EXAMINATIONS / EDUCATIONAL OFFICERS

Loss of Certificats.. .. .. .. .. .. .. .. .. 218

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்**

**ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவர் மறைமுகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 698/2011/கை.2.)*

No. VI(2)/198/2011.

தமிழ்நாடு 1995ஆம் ஆண்டு ஊராட்சிகளின் (தேர்தல்கள்) விதி 69—ன் துணை விதி (4)—க்கிணங்க கீழ்க்காணும் வேட்பாளர் அவருடைய பெயருக்கு நேரே குறிப்பிட்டுள்ள பதவிக்கு உரியவாறு 28—02—2011 அன்று நடத்தப்பட்ட மறைமுகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| *வேட்பாளர் பெயர்* (1) | *தேர்ந்தெடுக்கப்பட்ட பதவி* (2) |
|---|---|
| திரு. சி.எம். கிருஷ்ணகுமார் (10—வது வார்டு ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்) | பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தின் ஒன்றியக் குழு துணைத் தலைவர் |

கோயம்புத்தூர்,
2011 பிப்ரவரி 28.

**பு. •உமாநாத்,**
*மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

**மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை**

**தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் நிலங்களை ஊராட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கான அறிவிக்கை.**

*(ந.க. எண் 1054/2011./இ2.)*

No.VI(2)/199/2011.

1994—ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 121 உட்பிரிவு 1—ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம் ஆட்சியர் அவர்கள், இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழ்/புதுக்கோட்டை மாவட்ட அரசிதழ்***களில் பிரசுரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து, புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா மற்றும் கிராமம், குளத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட அடியில் கண்ட அட்டவணையில் கண்டுள்ள நிலங்கள் அதன் எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தை மேற்படி பஞ்சாயத்துக்கள் சட்ட அமுலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

அட்டவணை

*புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், குளத்தூர் கிராமம், குளத்தூர் ஊராட்சி.*

| *புலஎண் மற்றும் உட்பிரிவு* | *மொத்த விஸ்தீரணம் (ஹெக்.)* | *வகைபாடு* | *நீக்கப்பட்ட பரப்பு* | *நான்கெல்லைகள் (புலஎண் விபரம்)* | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | *வடக்கு* | *கிழக்கு* | *தெற்கு* | *மேற்கு* |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 158/1 | 2.07.0 | கல்லாங்குத்து | 0.06.0 | 156,157 | 144 | 175 | 154,159 |

**WITH DRAWAL NOTIFICATION**

In exercise of the powers conferred by sub-section 1 of Section 121 of the Tamil Nadu Panchayat Act 1994, the District Collector of Pudukkottai hereby directs that from and the date of publication of this notification in the *Tamil Nadu Government Gazette* and *Pudukkottai District Gazette* as detailed in the Schedule below lying with in the limits of Kulathur Panchayat at Kulathur Taluk, Pudukkottai District shall be excluded from the operation of the Tamil Nadu Panchayat Act, 1994.

SCHEDULE

*Pudukkottai District, Kulathur Taluk, Kulathur Village, Kulathur Panchayat.*

| *Survey No. & Sub-Division* | *Extent* | *Classification* | *Extent with drawn (Hec.)* | *Boundaries S.F. Nos.* | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | *North* | *East* | *South* | *West* |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 158/1 | 2.07.0 | Kallankuthu | 0.06.0 | 156, 157 | 144 | 175 | 154,159 |

Pudukkottai,
25th February 2011.

A. SUGANTHI,
*District Collector.*

**TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION**

[TERMS AND CONDITIONS FOR DETERMINATION OF TARIFF FOR INTRA STATE TRANSMISSION/ DISTRIBUTION OF ELECTRICITY UNDER MYT FRAMEWORK (AMENDMENT) REGULATIONS, 2011.]

**[Notification No. TNERC/MYT / 18 / 2 , dated 28-2-2011.]**

*[Lr. No. TNERC/AD(L)/F. Notification/D 243/2011.]*

No.VI(2)/200/2011.

Whereas the Tamil Nadu Electricity Regulatory Commission , in exercise of its powers conferred on it under Section 61 of the Electricity Act, 2003 (Act 36 of 2003) read with Section 181 of the said Act, specified and notified at pages 1-9 in Part VI—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 11th March 2009, the Tamil Nadu Electricity Regulatory Commission (Terms and Conditions for Determination of Tariff for Intra state Transmission / Distribution of Electricity under MYT Framework) Regulations, 2009;

And, Whereas, it is considered necessary to issue certain amendments to the said Regulations in line with the recommendations of the Working Group Reports of the Forum of Regulators, for the purpose of removing certain difficulties in regard to making modifications to the existing Regulations which were not adequately covered earlier, and the same have undergone previous publication;

Now, therefore , in exercise of the powers conferred on it under Section 61 of the Electricity Act , 2003 (Act 36 of 2003) read with Section 181 of the said Act and all other powers enabling it in this behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby specifies the following amendments to the Tamil Nadu Electricity Regulatory Commission (Terms and Conditions for Determination of Tariff for Intra state Transmission / Distribution of Electricity under MYT Framework) Regulations, 2009 (hereinafter referred to as the principal regulations).

**1. Short title and commencement:**

(*a*) These Regulations may be called the Tamil Nadu Electricity Regulatory Commission (Terms and Conditions for Determination of Tariff for Intra state Transmission / Distribution of Electricity under MYT Framework) (Amendment) Regulations, 2011.

(*b*) They shall come into force on the date of publication in the *Tamil Nadu Government Gazette.*

**2. Amendment of Regulation 3 of the Principal Regulations:**

In the Principal Regulations, in Regulation 3,-

(*a*) for item (iv) , the following shall be substituted, namely :-

**"(iv) Business Plan.—**

Every licensee shall submit the business plan and power purchase plan for approval of the Commission, at least six months prior to submission of the MYT petition. The business plan shall contain projection for all activities including on going projects, new projects with the specific nature, loss reduction, effective and tamper-proof metering etc. The licensee shall also furnish the criteria adopted for such projection. The Commission shall issue the order on the business plan and the power procurement plan within four months of submission, so that the licensee is able to submit the MYT petition on the basis of the approved plan.";

(*b)* for item (*ix*) following shall be substituted, namely :-

**"(ix) Mechanism for sharing approved gains or losses arising out of controllable factors.—**

The financial loss, if any, due to failure to achieve the target for the controllable costs in any of the years in the control period shall be borne by the licensee and the efficiency gains, if any, with respect to controllable parameters shall be shared between the licensee and the consumer in the ratio of 2 : 1.";

**3. Amendment of Regulation 11 of the Principal Regulations.—**

In the Principal Regulations, to Regulation 11, the following paragraph shall be added, namely :—

"The Distribution licensee shall achieve various indices related to supply availability as given by the Commission from time to time. For every under achievement of 1% in composite availability for urban and rural areas, ROE shall be reduced by 0.1% ." ;

**4. Amendment of Regulation 27 of the Principal Regulations.—**

In the Principal Regulations, to Regulation 27, the following paragraph shall be added at the end, namely:—

"Supply availability should be measured on the basis of power contracted by the distribution licensee on a long-term basis for the power procurement plan submitted by the utility.";

(By Order of the Commission)

Chennai-600 008,
4th March 2011.

R.V. RAJAH,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.**

**2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத் திட்டத்தின்படி மாநிலத்திற்குள் மின் செலுத்தல் / மின் பகிர்மானத்திற்கான மின்கட்டணவீதத்தை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள்.**

(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ / ப.ஆ.மி(MYT) / 18/2, 28–2–2011 நாளிட்டது.)

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

*[Lr. No. TNERC/AD(L)/F. Notification/D 243/2011]*

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும், அந்தச் சட்டத்தின் 61ஆம் பிரிவின்படி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்திட்டத்தின்படி மாநிலத்திற்குள் மின்செலுத்தல்/மின்பகிர்மானத்திற்கான மின்கட்டண வீதத்தை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளை குறித்துரைத்துள்ளது மற்றும் 2009 மார்ச் 11ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI—பிரிவு 2இல் 1–9 பக்கங்களில் வெளியிட்டுள்ளது என்பதாலும் ;

மற்றும் முன்னர் போதியளவு உள்ளடக்கப்படாத தற்போதுள்ள ஒழுங்குமுறைவிதிகளில் மாற்றமைவு செய்தல் தொடர்பாக ஒருசில இடர்ப்பாடுகளை நீக்கும் நோக்கத்திற்காக, ஒழுங்குமுறையாளர்கள் மன்றத்தின் பணிமக்குழு (working group) அறிக்கைகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஒருசில திருத்தங்களை வெளியிடுவது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டிருப்பதாலும் ;

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 61ஆம் பிரிவின்படி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்து பிறஅதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம் (இதில் இதன்பின்பு முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் என்று குறிப்பிடப்படும்) 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்தின்படி மாநிலத்திற்குள் மின்செலுத்தல் / மின் பகிர்மானத்திற்கான மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது.

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் : –**

(அ) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்திட்டத்தின்படி மாநிலத்திற்குள் மின்செலுத்தல் / மின்பகிர்மானத்திற்கான மின்கட்டண வீதத்தை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் (திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

(ஆ) இவை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :–**

**முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியில்,–**

(அ) (iv) ஆம் இனத்திற்குப் பதிலாகப் பின்வரும் இனம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

**(iv) அலுவல் முறைத்திட்டம்**

*உரிமம்தாரர் ஒவ்வொருவரும், பல்லாண்டுக்கான மின்கட்டண மனுவைத் தாக்கல் செய்வதற்கு குறைந்தது, ஆறு மாதங்களுக்கு முன்பு, ஆணையத்தின் ஒப்புதலுக்காக அலுவல்முறைத் திட்டத்தையும், மின்கொள்முதல் திட்டத்தையும் தாக்கல் செய்தல் வேண்டும். அலுவல்முறைத் திட்டமானது, நடந்து கொண்டிருக்கும் திட்டங்கள், குறித்தவகைத் தன்மையுடைய புதியத் திட்டங்கள், இழப்பு குறைப்பு, திறம்பட்ட மற்றும் மோசடியாகத் திருத்தப்படாதவாறு மின்னளவிடுதல் முதலியவை உள்ளடங்கலான நடவடிக்கைகள் அனைத்தையும் திட்ட மதிப்பீட்டில் கொண்டிருத்தல் வேண்டும். உரிமம்தாரர், அத்தகைய திட்ட மதிப்பீட்டிற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவுகளை அளித்தல் வேண்டும். ஆணையம், அலுவல் முறைத்திட்டம் மற்றும் மின்கொள்முதல் திட்டம் ஆகியவற்றிற்கு, உரிமம்தாரர் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் பல்லாண்டுக்கான மின்கட்டண மனுவை தாக்கல் செய்ய இயலும் என்ற நோக்கத்திற்காக, அவை தாக்கல் செய்யப்பட்ட நான்கு மாதங்களுக்குள் ஆணை பிறப்பித்தல் வேண்டும்.*

*(ix) கட்டுப்படுத்தக்கூடிய காரணிகளிலிருந்து கிடைக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட ஆதாயங்கள் அல்லது இழப்புகளை பகிர்ந்து கொள்வதற்கான செயலமைவுத் திட்டம்.*

*கட்டுப்பாட்டுக் காலத்தில் ஆண்டுகளில் ஏதேனுமொன்றில் கட்டுப்படுத்தக்கூடிய செலவுகளுக்கான இலக்கினை அடையத் தவறும்பொருட்டு ஏற்படும் நிதி இழப்பு, எவையேனுமிருப்பின், அவை உரிமம்தாரரால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய அளவுருக்கள் பொறுத்த திறம்பட்ட ஆதாயங்கள், எவையேனுமிருப்பின், அவை உரிமம்தாரருக்கும் நுகர்வோருக்குமிடையே 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும்.*

**3. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 11ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் .–**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின், 11ஆம் ஒழுங்குமுறைவிதியில் பின்வரும் பத்தி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

*"மின் பகிர்மான உரிமம்தாரர், கிடைக்கக்கூடிய மின் வழங்கல் தொடர்பாக அவ்வப்போது ஆணையத்தினால் வழங்கப்படும் பல்வேறு இலக்குகளை நிறைவேற்றுதல் வேண்டும். நகரக மற்றும் ஊரகப் பகுதிகளுக்கு கூட்டாகக் கிடைக்கக்கூடிய மின் வழங்கல் குறைவுபடும் 1 விழுக்காடு இலக்கு ஒவ்வொன்றிற்கும் மூலதனத்தின் மீதான வருவாய் 0.1 விழுக்காடு குறைக்கப்படுதல் வேண்டும்".*

**4. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :–**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின், 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் முடிவில் பின்வரும் பத்தி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

*"மின்பணி நிறுவனத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மின்கொள்முதல் திட்டத்திற்கான நீண்டகால அடிப்படையின் பேரில் மின்பகிர்மான உரிமம்தாரரால் மின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய மின் வழங்கல் அளவிடப்படுதல் வேண்டும்".*

*(ஆணையத்தின் ஆணைப்படி)*

R.V. RAJAH,
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

*சென்னை–600 008,*
*2011 மார்ச், 4.*

**Notification No. TNERC/SC/ 7-22, dated 21-02-2011.**

*[Lr. No. TNERC/AD(L)/F. Notification/D 289/2011]*

No. VI(2)/201/2011.

WHEREAS the Tamil Nadu Electricity Regulatory Commission specified and notified the Tamil Nadu Electricity Supply Code under section 50 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003) and published in Part VI–Section 2 of *Tamil Nadu Government Gazette*, dated the 1st September 2004 ;

AND, WHEREAS certain changes with regard to the approval of periodicity of meter reading, modes of collection of Current Consumption Charges have been brought to the knowledge of the Tamil Nadu Electricity Regulatory Commission;

AND, WHEREAS, it is considered necessary to issue certain amendments to regulations in the Tamil Nadu Electricity Supply Code to effect the above changes and such amendments shall be subject to the condition of previous publication and accordingly undergone such previous publication;

NOW, therefore in exercise of the powers conferred on it by Section 50 read with section 181 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003) and all other powers enabling it in this behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby makes the following amendments to the Tamil Nadu Electricity Supply Code, hereinafter referred to as “the Principal Code”:—

TAMIL NADU ELECTRICITY SUPPLY (AMENDMENT) CODE, 2011

**1. Short title and commencement.—**

(*a*) This Code may be called the Tamil Nadu Electricity Supply (Amendment) Code, 2011.

(*b*) This shall come into force on the date of publication in the *Tamil Nadu Government Gazette.*

**2. Amendment to Regulation 8.—**

**(a) In the Principal Code, in Regulation 8,**—

**(i) for sub-regulation (1), the following sub-regulation shall be substituted, namely—**

*“(1) In the case of Low Tension service connections, the Licensee with the approval of the Commission shall decide the periodicity of meter readings, collection dates, modes etc. However, in the case of temporary supply, the meter reading shall be taken at the end of the period in case sanction is for less than a month and once in a month in case sanction is for a period more than a month. The Licensee shall have access to the consumer’s premises at all reasonable hours for the purpose of such reading as per the provisions contained in section 163 of the Act. The format of the meter cards containing all basic information to be made available to the consumer shall be got approved by the Commission. It is the responsibility of the Licensee to ensure that the details in the respective meter cards are entered without omission”.*

**(ii) Sub-regulation (3) shall be omitted.**

**3. Amendment to Regulation 10.—**

**In the Principal Code, in Regulation 10,—**

**(i) for sub-regulation (2), the following sub-regulation shall be substituted, namely—**

“(2) If, on the next occasion, the meter is accessible for reading, the consumer will be charged for the actual consumption less the amount already charged, subject to the minimum monthly charges for both the periods. If, on the other hand, the meter remains inaccessible on the second occasion also, the consumer will be served with a 48 hours notice to open his premises at a fixed time and date to enable an employee of the Licensee to read the meter. In the said 48 hours notice, the consumer shall also be informed that the supply to his premises will be disconnected as per Section 163(3) of the Electricity Act, 2003, if he does not provide access to the meter. If the meter is now made accessible for reading, the consumer will be charged the actual consumption less the provisional amount charged and paid for the first period of inaccessibility subject to the minimum monthly charges for both the periods. If the meter remains inaccessible even after the 48 hours notice, the supply to the premises will be disconnected and for that period also provisional amount as in the case of previous occasion will be charged”.

**(ii) for sub-regulation (4), the following sub-regulation shall be substituted, namely—**

“(4) When a High Tension consumer leaves his installation connected to the Licensee’s mains but makes the meter inaccessible for reading by the employees of the Licensee, the employees of the Licensee will serve the consumer with a 48 hours notice to open his premises for reading of the meter at a fixed time. In the said 48 hours notice, the consumer shall also be informed that the supply to his premises will be disconnected as per Section 163(3) of the Electricity Act, 2003, if he does not provide access to the meter. If the meter is now made available for reading, the readings will be taken. If the meter

remains inaccessible even after the 48 hours notice, the supply to the premises will be disconnected and the consumer will be charged provisionally on the basis of the amount charged for the previous month. If the meter is made accessible subsequent to the disconnection, the consumer will be charged the actual consumption less the provisional amount charged subject to minimum monthly charges. All reconnections shall attract reconnection charges over and above the other charges as are applicable".

**4. Amendment to Regulation 15.-**

In the Principal Code, in Regulation 15,-

**(i) for sub-regulation (2), the following sub-regulation shall be substituted, namely—**

"(2) All High Tension bills, including those on account of miscellaneous charges, shall be paid within the due date fixed by the Licensee from the date of the bill. The High Tension Consumer shall pay the bills in cash or by demand draft on local bank or Cheque drawn on a bank at the headquarters of the designated authority of the distribution licensee or through electronic payment or collection through bank's branch counters or post office as stipulated by the distribution licensee. Payment for amounts exceeding Rs. 2000/- (Rupees two thousand only) is preferred by DD/ Cheque. Depending on the circumstances, the designated authority of the distribution licensee shall however accept cash payments also and advise the consumer for future remittances by DD/ Cheque. In case the Cheque is dishonoured for any reason whatsoever, the High Tension consumer will be required to pay the High Tension bills in cash or by demand draft thereafter. If the payment is not received within fifteen days (notice period) from the expiry of the due date allowed for payment, the supply will be disconnected. However the consumer may be allowed extension of time to make payment beyond the expiry of the notice period allowed for payment, on an application made to the designated authority of the Distribution Licensee, subject to the levy of BPSC as specified in this Code".

**(ii) for sub-regulation (3), the following sub-regulations shall be substituted, namely—**

*"(3) Low Tension Consumers shall pay the amount due in cash or by money order or by demand draft on local bank, or by Cheque drawn on a bank situated in the place where the Distribution Section Office is located or through electronic payment or collection through bank's branch counters or post office etc. as stipulated by the distribution licensee. However, local bodies and Railways may issue Cheque on the banks situated in the place of their office and the Licensee may claim the collection charges, if any, from such consumers. Payment for amounts exceeding Rs.2000/- (Rupees two thousand only) is preferred by DD/ Cheque. Depending on the circumstances, the designated authority of the distribution licensee shall however accept cash payments also and advise the consumer for future remittances by DD / Cheque.*

*(4) In case the Cheque issued by a consumer is dishonoured for any reason whatsoever, the Low Tension Consumer will be required to pay thereafter the amount due by cash/money order/ demand draft only. The Licensee shall have the powers to accord approval for restoring the Cheque facility for payment by the consumers after watching the performance of the consumers in regard to settlement of current consumption charges at least for the last three consecutive billing periods in respect of L.T consumers and three months period in respect of H.T consumers. The Licensee shall have the powers for restoration of cheque payment facility upto fourth occasion after watching the performance of the consumers in regard to subsequent settlement of charges. Such consumers shall pay service charges for dishonour of cheque as stipulated by the Commission in addition to the following:-*

*(a)Low Tension Consumers : Additional service charges @ 1% of the dishonoured cheque amount subject to a minimum of Rs.500/-.*

*(b)High Tension Consumers : Additional service charges @ 1% of the dishonoured cheque amount subject to a minimum of Rs.1000/-.*

*(c)This concession of restoration of cheque payment facility shall not be given thereafter for a service connection".*

(By Order of the Commission)

Chennai-600 008,
11th March 2011.

R.V. RAJAH,
*Secretary,*
*Tamil Nadu Electricity*
*Regulatory Commission.*

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## (அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./ SC/ 7–22, 21–02–2011 நாளிட்டது )

### (ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சார விதித்தொகுப்பினை குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது மற்றும் 2004ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** 2ஆம் பிரிவின் பகுதி VI –இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் மின் பயனீட்டுக் கணக்கீட்டின் காலமுறை அறிக்கை, மின் நுகர்வுக் கட்டணங்களை வசூலிக்கும் முறைகள் ஆகியவற்றிற்கு ஒப்புதலளிப்பது பொறுத்து ஒருசில மாற்றங்கள் செய்வதற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் மேற்சொன்ன மாற்றங்களைச் செயற்படுத்துவதற்கு தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கு ஒருசில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், (இதற்கு பின்பு இதில் "முதன்மை விதித் தொகுப்பு" என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை இதன் மூலம் செய்கிறது. :–

**2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(அ) இந்த விதித்தொகுப்பு, 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(ஆ) இது, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. 8ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் : –**

(அ) முதன்மை விதித் தொகுப்பில், 8ஆம் ஒழுங்குமுறை விதியில்,–

(i). (1)ஆம் உள்–ஒழுங்குமுறை விதிக்குப் பதிலாக, பின்வரும் உள்–ஒழுங்குமுறை விதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது,–

"(1) தாழ்வழுத்த மின்னிணைப்புகளைப் பொறுத்தவரை, உரிமம்தாரர், ஆணையத்தின் ஒப்புதலுடன், மின் பயனீட்டுக் கணக்கீட்டின் காலமுறை அறிக்கை, வசூலிப்பு நாட்கள், முறைகள் முதலியவை குறித்து முடிவு செய்தல் வேண்டும். எனினும், தற்காலிக மின் வழங்கல் பொறுத்தவரை, ஒப்பளிப்பு ஒரு மாதத்திற்கும் குறைவாக இருக்கும் நேர்விலும், ஒப்பளிப்பு ஒரு மாதத்திற்கும் மேற்பட்ட காலஅளவாக இருக்கும் நேர்விலும், மின் பயனீட்டுக் கணக்கீடு அந்த காலஅளவின் முடிவில் எடுக்கப்படுதல் வேண்டும். உரிமம்தாரர், சட்டத்தின் 163ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளின்படி அத்தகைய மின் பயனீட்டுக் கணக்கீடு எடுப்பதன் பொருட்டு நியாயமான நேரங்களில் நுகர்வோரின் வளாகத்திற்குள் நுழைவதற்கு உரிமையுடையவராவார். நுகர்வோருக்கு கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டிய அனைத்து அடிப்படை தகவலும் அடங்கிய மின் அட்டைகளின் வடிவமானது, ஆணையத்தினால் ஒப்புதலளிக்கப் படவேண்டும். அந்தந்த மின் அட்டைகளிலுள்ள விவரங்கள் விடுகையில்லாமல் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்வது உரிமம்தாரரின் பொறுப்பாகும்.

(ii). (3)ஆம் உள்– ஒழுங்குமுறைவிதி விட்டுவிடப்பட்டது.

**3. 10ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்,–**

முதன்மை விதித் தொகுப்பில், 10ஆம் ஒழுங்குமுறைவிதியில்,–

(i). (2)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் உள்–ஒழுங்குமுறை அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது ,–

"(2) அடுத்தமுறை, மின்னளவியானது, மின் பயனீட்டு கணக்கீட்டிற்காக எளிதில் அணுகக்கூடிய நிலையிலிருக்குமானால், மின்நுகர்வோர், இரண்டு கால அளவுகளுக்கும் குறைந்தபட்ச மாதாந்திரக் கட்டணங்களுக்கு உட்பட்டு, ஏற்கெனவே வசூலிக்கப்பட்ட தொகை குறைக்கப்பட்டு உள்ளபடியேயான மின் நுகர்வுக்காக வசூலிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறின்றி, இரண்டாம் முறையும் மின்னளவி எளிதில் அணுகமுடியாத நிலையிலிருக்குமானால், மின்நுகர்வோர், உரிமம்தாரரின் பணியாளர் ஒருவர் மின்னளவியில் மின் பயனீட்டுக் கணக்கீடு எடுப்பதற்கு இயலுமாறு குறிப்பிட்ட நேரம் மற்றும் நாளில், தம்முடைய குடியிருப்பிடத்தை திறந்து வைக்குமாறு கோரும் 48 மணி நேர அறிவிப்பு சார்வு செய்யப்படுதல் வேண்டும். மின் நுகர்வோர், மின்னளவியை எளிதில் அணுகி மின் பயனீட்டுக் கணக்கீடு எடுக்க வகை செய்யாதிருப்பாரானால், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 163(3)ஆம் பிரிவின்படி, அவருடைய குடியிருப்பிடத்தில் மின்துண்டிப்பு செய்யப்படும் என்று மேற்சொன்ன 48 மணி நேர அறிவிப்பில் அவருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும். தற்போது மின்னளவி எளிதில் அணுகக்கூடிய நிலையில் இருக்குமானால், இரண்டு காலஅளவுகளுக்கான குறைந்தபட்ச மாதாந்திர கட்டணங்களுக்கு உட்பட்டு, வசூலிக்கப்பட்ட தற்காலிகத் தொகை மற்றும் எளிதில் அணுக முடியாத நிலையிலுள்ள முதல்கால அளவிற்கு செலுத்தப்பட்ட தொகை கழிக்கப்பட்டு உள்ளபடியேயான மின் நுகர்விற்காக வசூலிக்கப்படுதல் வேண்டும். 48மணி நேர அறிவிப்பிற்குப் பின்பும் மின்னளவி தொடர்ந்து எளிதில் அணுகமுடியாத நிலையிலிருக்குமானால், குடியிருப்பிடத்திற்கான மின்வழங்கல் துண்டிக்கப்படும் மற்றும் அந்தக் கால அளவிற்காக, முந்திய முறை வசூலிக்கப்பட்டதைப் போன்று தற்காலிகத் தொகை வசூலிக்கப்படும்.

(ii) (4)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாகப் பின்வரும், உள்–ஒழுங்குமுறை விதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது, –

"(4) உயர்அழுத்த மின் நுகர்வோர், உரிமம்தாரரின் தலைமை நுகர்வாயுடன் இணைக்கப்பட்ட தம்முடைய மின்அமைப்பை விட்டுச் செல்லும்போது, உரிமம்தாரரின் பணியாளரால் மின் பயனீட்டுக் கணக்கீடு செய்வதற்காக மின்னளவி எளிதில் அணுகமுடியாத நிலையிலிருக்குமானால், உரிமம்தாரரின் பணியாளர், குறிப்பிட்ட நேரத்தில் மின்னளவியில் மின்பயனீட்டுக் கணக்கீடு செய்வதற்காக மின்

நுகர்வோர், தம்முடைய குடியிருப்பிடத்தை திறந்து வைக்குமாறு 48 மணி நேர அறிவிப்பு அவருக்குச் சார்வு செய்தல் வேண்டும். அவர் மின்னளவியை எளிதில் அணுகுவதற்கு வகை செய்யாதிருப்பாரானால், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 163(3)ஆம் பிரிவின்படி, அவருடைய குடியிருப்பிடத்தில் மின் வழங்கல் துண்டிக்கப்படும் என்று மேற்சொன்ன 48 மணி நேர அறிவிப்பில் தெரிவிக்கப்படுதல் வேண்டும். தற்போது, மின்னளவி மின் பயனீட்டுக் கணக்கீடு செய்வதற்கு எளிதில் அணுகக்கூடிய நிலையிலிருக்குமானால், மின் பயனீட்டுக்கணக்கீடு எடுக்கப்படும். 48 மணி நேர அறிவிப்பிற்குப் பின்பும், மின்னளவி எளிதில் அணுகமுடியாத நிலையிலிருக்குமானால், குடியிருப்பிடத்திற்கான மின் வழங்கல் துண்டிக்கப்படும் மற்றும் மின் நுகர்வோரிடம் முந்திய மாதத்திற்காக வசூலிக்கப்பட்ட தொகை அடிப்படையில் தற்காலிக தொகை வசூலிக்கப்படும். மின் துண்டிப்பிற்குப் பின்பு, மின்னளவியானது அணுகத்தக்கதாக செய்யப்படுமானால், மின் நுகர்வோர், குறைந்தபட்ச மாதாந்திர கட்டணங்களுக்கு உட்பட்டு, வசூலிக்கப்பட்ட தற்காலிகத் தொகையைக் கழித்து உள்ளபடியேயான மின்நுகர்வுக்குரிய கட்டணம் வசூலிக்கப்படும். மறு மின்னிணைப்புகள் அனைத்தும், பொருந்தக்கூடிய பிற கட்டணங்களுக்கு அதிகமாக மறு மின்னிணைப்புக் கட்டணங்களையும் உள்ளடக்கக்கூடியதாகும்.

**4. 15ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,–**

முதன்மை விதித் தொகுப்பில், 15ஆம் ஒழுங்குமுறைவிதியின், –

(i). (2)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது,–

“(2) பல்வகைக் கட்டணங்கள் பொருட்டானவை உள்ளடங்கலான, உயர் அழுத்த பட்டிகள் அனைத்தும், பட்டியல் தேதியிலிருந்து உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்ட கொடுபடவேண்டிய தேதிக்குள் செலுத்தப்படுதல் வேண்டும். உயர் அழுத்த மின் நுகர்வோர், ரொக்கமாக அல்லது உள்ளூர் வங்கியின் கேட்பு வரைவோலை மூலமாக அல்லது மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமனம் செய்யப்பட்ட அதிகாரியின் தலைமையிடத்திலுள்ள வங்கிக்கு வரையப்பட்ட காசோலை மூலமாக அல்லது மின்னணுவியல் செலுத்துகை மூலமாக அல்லது வங்கி கிளையின் முகப்பிடங்கள் வாயிலான வசூலிப்பு மூலமாக அல்லது மின் பகிர்மான உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்ட அஞ்சலகங்கள் மூலமாக பட்டிகளுக்கான தொகை செலுத்தப்படுதல் வேண்டும். ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மேற்பட்ட தொகைகளுக்கான செலுத்துகை, கேட்பு வரைவோலை / காசோலை மூலமாகச் செலுத்தப்படும். சூழ்நிலைகளுக்கு ஏற்ப, மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமனம் செய்யப்பட்ட அதிகாரி ரொக்க செலுத்துகைகளை ஏற்றுக் கொள்தல் வேண்டும் மற்றும், மின் நுகர்வோரிடம் வருங்கால செலுத்துகைகளை கேட்பு வரைவோலை / காசோலை மூலமாகச் செய்யுமாறு ஆலோசனை வழங்குதல் வேண்டும். எவ்வகையான காரணத்தின் பேரிலும், காசோலைக்கு மதிப்பு மறுக்கப்படும் நேர்வில் அதன்பின்பு, உயர் அழுத்த மின் நுகர்வோர், உயர்அழுத்த மின்பட்டிகளுக்கு ரொக்கமாக அல்லது கேட்பு வரைவோலை மூலமாகச் செலுத்துமாறு கோரப்படுதல் வேண்டும். பணச் செலுத்துகை (அறிவிப்புக் காலமான) செலுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட உரிய தேதி கழிந்ததிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் பெறப்படாதிருக்குமானால், மின் வழங்கல் மின் துண்டிப்பு செய்யப்படும். எனினும், மின் நுகர்வோர், இந்த விதித்தொகுப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு தாமதச் செலுத்துகைக்கான உபரிக் கட்டண (BPSC) விதிப்பிற்கு உட்பட்டு, மின்பகிர்மான உரிமம்தாரரால் நியமிக்கப்படும் அதிகாரியிடம் விண்ணப்பம் செய்வதன் பேரில், செலுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட அறிவிப்புக் காலஅளவு முடிவடைந்த பின்பும், செலுத்துகை செய்வதற்கு கால நீட்டிப்பு அனுமதிக்கப்படலாம்.

(ii) (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதிகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது, –

“(3) தாழ்வழுத்த நுகர்வோர், ரொக்கமாக அல்லது வரைவஞ்சல் மூலமாக அல்லது உள்ளூர் வங்கியின் கேட்புவரைவோலை மூலமாக அல்லது மின்பகிர்மான பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் உள்ள வங்கிக்கு வரையப்பட்ட காசோலை மூலமாக அல்லது மின்னணுவியல் செலுத்துகை வாயிலாக, அல்லது வங்கியின் கிளை முகப்பிடங்கள் வாயிலான வசூலிப்பு மூலமாக அல்லது மின் பகிர்மான உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்ட அஞ்சல் அலுவலகம் முதலியவை மூலமாக கொடுபடவேண்டிய தொகையைச் செலுத்துதல் வேண்டும். எனினும், உள்ளாட்சி அமைப்புகள், மற்றும் இருப்பூர்தியங்கள், தங்களுடைய அலுவலகம், அமைந்துள்ள இடத்திலுள்ள வங்கிகளுக்கு வரையப்பட்ட காசோலையை வழங்கலாம் மற்றும் உரிமம்தாரர், அத்தகைய மின்நுகர்வோரிடமிருந்து வசூலிப்பு கட்டணங்கள், எவையேனுமிருப்பின், அவற்றைக் கோரலாம். ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)–க்கு மேற்பட்ட தொகைகளுக்கான செலுத்துகை கேட்பு வரைவோலை / காசோலை மூலமாகச் செலுத்தப்படும். சூழ்நிலைகளுக்கு ஏற்ப, மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமனம் செய்யப்பட்ட அதிகாரி ரொக்கச் செலுத்துகைகளை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் மற்றும் வருங்கால செலுத்துகைகளை கேட்பு வரைவோலை / காசோலை மூலமாகச் செய்யுமாறு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

(4) எவ்வகையான காரணத்தின் பேரிலும், நுகர்வோரால் வழங்கப்பட்ட காசோலைக்கு மதிப்பு மறுக்கப்படும் நேர்வில், அதன் பின்பு தாழ்வழுத்த மின் நுகர்வோர், கொடுபடவேண்டிய தொகையை ரொக்கமாக / பண அஞ்சல் / கேட்பு வரைவோலை மூலமாக மட்டுமே செலுத்துமாறு கோரப்படுதல் வேண்டும். உரிமம்தாரர், தாழ்வழுத்த மின் நுகர்வோர் பொறுத்து குறைந்தது தொடர்ச்சியான கடைசி மூன்று அளவுகளுக்கான மற்றும் உயர் அழுத்த மின் மின்நுகர்வோர் பொறுத்து மூன்று மாதங்களுக்கான மின் நுகர்வுக் கட்டணங்களை செலுத்துவது குறித்து மின் நுகர்வோரின் நடவடிக்கையை கண்காணித்த பின்பு, மின் நுகர்வோரால், காசோலை மூலமாக செலுத்துவதற்கான வசதியை திரும்பவும் அளிப்பதற்கான ஒப்புதல் அளிப்பதற்கான அதிகாரங்கள் உடையவராவார். உரிமம்தாரர் மின் கட்டணங்களைச் செலுத்துதல் குறித்து மின் நுகர்வோரின் நடவடிக்கைகளை கண்காணித்த பின்பு, நான்காவது முறை வரை, காசோலை மூலமாக செலுத்துகை வசதியைத் திரும்பவும் அளிப்பதற்கான அதிகாரங்கள் உடையவராவார். அத்தகைய மின் நுகர்வோர், பின்வருவனவற்றிற்குக் கூடுதலாக, ஆணையத்தினால் குறிப்பிடப்பட்டவாறு, காசோலை மதிப்பு மறுக்கப்பட்டதற்காக சேவைக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும், –

(ஒ) தாழ்வழுத்த மின் நுகர்வோர்:

குறைந்தபட்சம் ரூ.500/–க்கு உட்பட்டு, மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைத் தொகையின் 1 விழுக்காடு கூடுதல் சேவைக் கட்டணம்.

(ஓ) உயர் அழுத்த மின் நுகர்வோர் :

அதிகபட்சம் ரூ.1000/–க்கு உட்பட்டு, மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைத் தொகையின் 1 விழுக்காடு கூடுதல் சேவைக் கட்டணம்.

(ஔ) காசோலை மூலமான செலுத்துகை வசதியினைத் திரும்பப் பெறும் சலுகையானது, இதன்பின்பு, மின்னிணைப்பிற்கு வழங்கப்படுதல் ஆகாது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**ரா. வெ. ராஜா,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை–600 008,
2011 மார்ச் 11.

**GOVERNMENT EXAMINATIONS / EDUCATIONAL OFFICERS**

LOSS OF CERTIFICATES

It is hereby notified that the Original Higher Secondary Certificates / Matriculation Certificates / Diploma Certificates/ School Certificates of the following pupils are reported to have been lost beyond recovery. Necessary steps are being taken to issue the duplicate of the said Certificates. If the Originals were to be found by anybody, they should be treated as invalid and sent to the Secretary, Board of Higher Secondary Examination / Directorate of Government Examinations, Chennai-6 / Director of Technical Education, Chennai-25 / Inspector / Inspectress of Matriculation and Anglo-Indian Schools as the case may be for cancellation:—

| *சி.என்.சி. எண்.* | *மாணவர்/மாணவி பெயர், பள்ளியின் பெயர் மற்றும் கல்வி மாவட்டம்.* | *பதிவு / சான்றிதழ் எண்.* | *மாதம் மற்றும் வருடம்.* | *தேர்வின் விவரம்.* | *கடித எண்ணும் தேதியும்.* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| No. VI(2)/202/2011. | | | | | |
| | **கன்னியாகுமரி:** | | | | |
| | எம். மேரிஜெயின் | 4065 | ஆகஸ்ட் **1988** | தொழிலாசிரியர் சான்றிதழ் | ந.க.எண் **148140/ஜி/2010,** நாள்: **03–01–2011.** |
| | **சென்னை:** | | | | |
| | பி. மகேந்திரன் | 402133 | செப்டம்பர் **2004** | தொழிலாசிரியர் சான்றிதழ் | Do. |
| No. VI(2)/203/2011. | | | | | |
| | **மதுரை:** | | | | |
| | என். அருண்மொழி | **000879** | ஆகஸ்ட் **2002** | தொழிலாசிரியர் சான்றிதழ் | ந.க.எண் **101359/ஜி/2011,** நாள்: **20–01–2011.** |

**சு. சந்திரவதனி,**
*கூடுதல் செயலாளர் (எஸ்.எஸ்.எல்.சி.),*
*அரசுத் தேர்வுகள் இயக்ககம்,*
*சென்னை–600 006.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU